1992 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சீனிவாசன்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இலவச வீடுகள் பெறும் அளவிற்கு பொருளாதாரத்தில் பின்தங்கி உள்ள குடும்பங்கள் எத்தனை உள்ளன என்பதை அறிய ஜாபிதா கணக்குகள் எடுத்து, தாலுக்கா வாரியாக அரசு வைத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புள்ளி விவரங்கள் அரசிடத்திலே தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :வினா எண். 667. திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

667—

மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி செயல்படுதல்.

*7880—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் உருக்காலை அருகே மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரிக்காக கட்டப்பட்டு வரும் புதிய கட்டிடத்தில் மருத்துவக் கல்லூரி எப்போதிலிருந்து செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. சு.முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் உருக்காலை அருகே அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிக்கு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. பிரதான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. அக்கட்டிடத்திற்கான கதவுகள், ஜன்னல்கள் ஆகியவைகள் செய்து அமைக்கும் பணி முன்னேற்றமடைந்து கொண்டு இருக்கிறது என்றும் அனேகமாக இம்மாத கடைசிக்குள் முடிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்

[1992 மே 5

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலே இயங்கி வருகின்ற மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களுக்குப் போதிய வசதிகள் இல்லை. அவர்கள் பரீட்சை எழுதுவதற்குக் கூட தயங்கக் கூடிய நிலையில் வேறு கல்லூரிகளிலே சென்று பயிற்சி பெறக் கூடிய நிலையை மாற்றி, அவர்களுக்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்கல்லூரிக்கு நேராக நான் சென்று பார்த்து, அத்தியாவசியமாக இப்போது தேவைப்படுவதை, டெம்பரரியாக ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், நிரந்தரமாக கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அந்தக் கட்டிடங்கள் இந்த மாதம் கடைசிக்குள்ளாக முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனேகமாக, இந்தக் கட்டிடம் முடிந்தால், அந்தப் பிரச்சினை முழுவதுமாக தீருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இன்னும் பெண்களுக்கு தங்குகிற விடுதிக்குக் கூட மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் பணம் ஒதுக்கி அந்தப் பணியும் துவங்க இருக்கிறது. எனவே, நிச்சயமாக அந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

முற்பகல் 10–05

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சேலம் உருக்காலையில் ஆரம்பிக்கப்பட இருக்கின்ற அந்த மருத்துவக் கல்லூரியிலே இன்றைய தினம் சேலம் நகரத்திலே இருக்கின்ற அந்த மருத்துவ மனையையும் சேர்த்து இணைத்து அதற்கு ஒரு திட்டம் அரசிடம் தயார் நிலையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருக்காலைக்கு அருகிலே இருக்கிற இடத்திலே ஏறத்தாழ 150 ஏக்கர் பரப்பளவிலே மருத்துவக் கல்லூரியை மட்டுமே இப்போது கட்டுவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோம். மருத்துவ மனையைப் பொறுத்தவரை, சேலம் நகரத்தினுடைய மையத்திலே அமைந்திருக்கின்ற அந்த மருத்துவமனையை இந்தக் கல்லூரிக்காக இப்போது நாம் பயன்படுத்திக் கொள்ள இருக்கிறோம். எதிர் காலத்திலேதான் தனியாக இங்கே மருத்துவமனை ஆரம்பிக்க வேண்டுமா என்பது பற்றி ஆலோசிக்கப்படும். ஆனால் தற்போது சேலத்தில் இருக்கின்ற மருத்துவ மனையையே நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். இடையிலே பத்து கிலோ மீட்டர்தான் இருக்கிறது. எனவே வாகனங்களை வைத்து நாம் அங்கே வந்து அந்த மருத்துவமனையைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது.